Deposition of Witness

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.STC.No.584/ 2023

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.6**

| | | | |
|---|---|---|---|
| Name: | ரவி | Calling: | உதவி ஆய்வாளர் (ஓய்வு) |
| Father's Name: | கோபால் | Religion: | |
| Village: | | Age: | 62 |
| Taluk: | குடியாத்தம் | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 06.05.2025

(எதிரி ஆஜர்)

அ.சா. 6 முதன்மை விசாரணை

நான் விரிஞ்சிபுரம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி 31.05.2023ம் தேதி ஓய்வு பெற்றேன். கடந்த 25.04.2017ம் தேதி இரவு 23.30 மணிக்கு நான் வாணியம்பாடி நகர காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பொறுப்பு அலுவலில் இருந்தபோது வாணியம்பாடி அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கபெற்ற தகவலை பெற்று அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த திரு.விஜயகுமார், வயது 20, த/பெ.ஜெயபால், அம்பூர்பேட்டை, வாணியம்பாடி என்பவர் கொடுத்த வாக்குமூலத்தை பெற்று அதன்தன்மைகேற்ப நிலைய குற்ற எண் 154/2017 சட்டப்பிரிவுகள் 323, 294(பி), 506(1) இதச கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **புகார் மனு அசாஆ3 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அசாஆ4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** புகார் மனுவின் அசலை முதல் தகவல் அறிக்கையுடன் இணைத்து நீதிமன்றத்திற்கு அனுப்பினேன்.

பின்னர் நானே வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு சம்பவயிடம் சென்று 26.04.2017ம் தேதி காலை 08.30 மணிக்கு

சம்பவயிடத்தை பார்வையிட்டு சாட்சிகள் மணி, கார்த்திகேயன் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் அசாஆ 5 மற்றும் அசாஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் சாட்சிகள் விஜயகுமார், பார்த்திபன், இளங்கோ, ஜெயபால் மற்றும் மகசர் சாட்சிகள் ஆகியவர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 26.04.2017ம் தேதி வழக்கின் எதிரியை தேடி வாணியம்பாடி பெருமாள்பேட்டை, காமராஜர்புரம் பகுதிகளில் தேடி வந்தபோது வாணியம்பாடி முனிஸ்வரன் கோவில் அருகே நின்று கொண்டிருந்த எதிரியை சாட்சிகள் அடையாளம் காட்ட கைது செய்து கைது செய்த விவரத்தை அவரது உறவினர்களுக்கு தெரிவித்தும், எதிரியுடன் காலை 11.00 மணிக்கு நிலையம் சேர்ந்து நிலைய பாராவசம் ஒப்படைத்து எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி கொண்டேன். இவ்வழக்கில் வழக்கின் முதற்கட்ட புலன் விசாரணையை முடித்து மேல்விசாரணைக்காக உதவி ஆய்வாளர் பார்வைக்கு வைத்து கொண்டேன். எனது விசாரணையில் சாட்சிகள் அனைவரும் குவிமுச பிரிவு 161(3) ன் படி வாக்குமூலத்தில் உள்ளதை போல் தான் சொன்னார்கள்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் கடந்த 25.04.2017ம் தேதியே எதிரி உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அ.சா.1யிடம் மருத்துவமனையில் வாக்குமூலம் பதிவு செய்யும்போது எதிரி அதே மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. புகார்தாரர் வாக்குமூலம் கொடுக்கும்போது கடந்த 2 வருடங்களுக்கு முன்பு முன்விரோதம் இருந்ததை பற்றி கூறியிருக்கிறாரா என்றால் இல்லை. அ.சா.1 வாக்குமூலத்தில் முன்விரோதம் இருந்ததை பற்றி புகாரில் கூறியிருந்தாலும் அந்த புகாரே தவறு என்றாலும் சரிதான். அ.சா.1 புகார் வாக்குமூலத்தில் கடந்த 2 வருடங்களுக்கு முன்பு முன்விரோதம் இருந்ததை பற்றி புகாரில் கூறியிருக்கிறாரா என்றால் சரிதான். புகார்தாரர் தன்னுடைய வாக்குமூலத்தில் எதிரி இருசக்கர வாகனத்தில் வந்து தகராறு செய்தார் என கூறியிருக்கிறார்

என்றால் வாகனத்தின் பதிவெண், அந்த வாகனத்தின் உரிமையாளர் யார் என்பதை பற்றி குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான்.

உண்மையில் இவ்வாறு ஒரு சம்பவம் நடந்திருந்தால் வாகனத்தின் உரிமையாளர் மீது தான் வழக்கு பதிவு செய்திருக்க வேண்டும் என்றாலும், முன்விரோதத்தின் காரணமாக எதிரி மீது தவறான ஒரு வழக்கை பதிவு செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. அ.சா.1 தனது வாக்குமூலத்தில் எதிரியுடன் 2 நபர்கள் உடனிருந்தார்கள் என கூறியிருந்தாலும், அவர்களது பெயர், முகவரியை குறிப்பிட்டு கூறியிருக்கிறாரா என்றாலும் அவர் கூறவில்லை. எதிரியிடம் அந்த 2 நபர்களை பற்றி நான் விசாரணை செய்துள்ளேனா என்றால் இல்லை. இந்த வழக்கில் சாட்சிகளாக சேர்க்கப்பட்டுள்ள அ.சா.2 முதல் அ.சா.5 வரை உள்ள சாட்சிகள் அ.சா.1ன் உறவினர்களா என்றால் சரிதான். இவ்வழக்கில் மூன்றாம் நபர் யாரையும் நான் சாட்சியாக விசாரித்துள்ளேனா என்றால் சாட்சியம் அளிக்க யாரும் முன்வரவில்லை. பார்வை மகசர் சாட்சியான கார்த்திகேயன் தனது நீதிமன்ற சாட்சியத்தில் ஆட்டோ ஸ்டான்டில் வெள்ளை தாளில் தான் கையொப்பம் செய்தேன் என கூறியுள்ளார் என்றால் சரியல்ல.

எதிரி அரசு மருத்துவமனையில் இருந்தவரை தான் நான் கைது செய்தேன் என்றாலும், முனிஸ்வரன் கோவில் அருகே கைது செய்யவில்லை என்றாலும் சரியல்ல. எதிரி கொடுத்த புகாரின் மேல் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் எதிரி மீதே தவறான வழக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சம்பவயிடத்திற்கு செல்லவில்லை, சாட்சிகளை விசாரிக்கவில்லை, வழக்காவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து தயாரித்துக்கொண்டேன் என்றால் சரியல்ல. நான் இவ்வழக்கில் எவ்வித புலன் விசாரணையை மேற்கொள்ளாமல் தவறான முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) ரவி

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K